C

4

Q23:41T
N23
182095

700

உ

சிவமயம்.

2 - NOV 19
MADRAS

பரியாமருந்தீசுவரர்

# மருந்தலங்காரம்.

சேவகப்பெருமாளையனூர்

# சேவகமாலை.



இவை

நெற்குப்பை

## மு. பைரவையர்

இயற்றியவை.

மதுரை, வடக்குமாசிவீதி
மனோன்மணி விலாசம் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் 1923. அணா—4.

TERED COPY RIGHT.

Q23:417
N23
189095

உ

சிவமயம்.

பரியாமருந்தீசுவரர்

# மருந்தலங்காரம்.

சேவகப்பெருமாளையனர்

# சேவகமாலை.

இவை

நெற்குப்பை

## மு. பைரவையர்

இயற்றியவை.

2-NOV 1923
MADRAS

மதுரை, வடக்குமாசிவீதி

மஞ்ஞேன்மணி விலாசம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை 1923. அண—4.

REGISTERED COPY RIGHT.

உ

சிவமயம்.

மருதீசர் துணை.

பரியாமருந்தீசுவரர்

# மருந்தலங்காரம்.

## காப்பு.

கட்டளைக்கலித்துறை.

தருந்தேவக் கற்பகத் தாருச மானத் தருமருதத்
திருந்தேவ ரும்பேண் மருந்தலங் காரத் திருத்துதியை
விருந்தே செவிக்கெனச் செப்பிய வேண்டுவன் வேழமுகப்
பெருந்தேவைச் செந்தமிழ் வித்தையென் னாவிற் பெருகுதற்கே.

## நூல்.

திருவே சிறந்த சிந்தாமணியே நிறை செம்பொனலர்த்
தருவே நலந்தரு போதப் பயக்கடல் தந்தவமு
தருவே பசுங்கொடி சூழ்பிர வாளத் தொருமலையே
மருவே மலிந்த மருதார் வனத்துறை மாணிக்கமே. (1)

உலகேழு மேழு முளவண்ட கோடி யுதித்திருந்த
வலகேயி லாத பெருவெளி யாயறி வானந்தமா
யிலகேதி லாத பரம்பொரு ளாமெ னிதயமரை
மலரே விரிக்க மருதார் வனத்தெழு வான்மணியே. (2)

ஒளியா யிருள்பக லற்றென தாரகத் தூடெழுந்த
வளியாய் வெளியாய் வளியன னீர்மண தாயுலகாய்க்
களியாய தெப்பொரு ளப்பொரு ணீயெனக் கண்டுகொண்டேன்
வளியாய் மலர்ந்த மருதார் வனத்து மகாலிங்கமே. (3)

கனியே கனிந்த ரசமே ரசத்திற் கமழ்சுவையே
துனியே தடுக்குமென் கண்மணி யேயென் சுகக்கடலாத்
தனியே கருத்திற் கிசைந்தறி வாயுருவீர் [illegible]
முனியா ருவப்ப மருதார் வனத்துறை முக்கண்ணனே. (4)

2 - NOV 1923.
182095
182095

அறனே சுமக்கு மானே மராள மனையளிடப்
புறனே யவுணர் புரனே ரழித்த புதுநகையாய்
திறனே தரமா திரனே யுடுத்துச் சிலம்பெடுத்த
மறனே செழித்த மருதார் வனத்துறை மன்னவனே. (5)

திரணைக் கொங்கைத் துணையீந்த பூங்கொடி சேருநடச்
சரணா விந்தமெ னக்கர ணாகச் சமனலிய
மரணாதி யுற்பவ நோய்களெ லாமிந்த மானிலத்தின்
முரணா தொழிக்க மருதார் வனத்தெழு மூலிகையே. (6)

மூலா வெனக்கச முன்போந்த மாயன் முளரிவிழிக்
காலா கொடுங்கால காலாவெங் காமற் கனனயனப்
பாலா கபாலப் பணிமாலை யாய்சருப் பாபரணா
சீலாசெங் கோலா மருதார் வனத்துறை சேவகனே. (7)

மாலாம் பிறப்பிறப் பாலான வெவ்வினை வாட்டவருங்
காலா வுனைக்கொ லுங் காலான தென்மனக் கஞ்சமலர்
மேலா நடித்ததிங் கேலா துன்க்கினி மேற்சயமுச்
சூலா யுதங்கடா வாலேர் தொடுத்துழச் சொல்லுவனே. (8)

வேலுங் கயலுங் கமலமு நாண விஜயமுற்ற
தாலும் மதுரையி னலுங் கனிந்து தனகமதிற்
கோலும் மிடத்தைக் கொடுத்தரு ணியென்றன் கொங்கையுற்ற
மேலுந் திருப்பத முந்தரத் தாமத மேன்றுரையே. (9)

தீரா தெனச்சொலத் தொல்வினை யால்வருந் தீப்பிணிகள்
சேரா திருக்கவும் பாராதிருக்கவுந் தேர்ந்துடலஞ்
சீரா யிருக்கவும் வேண்டுகிற் பாரொரு சிந்தனையி
னேராப் பணிக மருதார் வனத்துறை நித்தனையே. (10)

மிஞ்சிய நஞ்சச் சருப்பாதி சேர்ந்து விஷமவை
வெஞ்சினத் தாலுடற் றீண்டினு நோவு விளைந்திடுமோ
நஞ்சுண்ட கண்டனை நஞ்சவ ராள நகையனைத்தந்
தஞ்சமென் பார்க்கு மருதார் வனத்தமு தாகுவனே. (11)

வஞ்சினஞ் சூதனி யன்வினை யேவலு மாரணமுந்
தஞ்சமென் றாரிடஞ் சார்ந்திடுமோ வினிச் சஞ்சலமேன்

விஞ்சையி ராசமஞ் சக்கர னீமவி பூதியினுன்
அஞ்சனப் பேய்நட னன்மரு தார்வனத் தான்பதமே. (12)

பூதமும் பேயும் பிரேதமும் ராக்கசப் பூசுரனும்
காதகக் கந்தரு வாதி முனீசருங் காளிகளுந்
தீதுறுந் தெய்வதக் கூட்டமு மோடிச் சிதைந்திடுமே
பாதம் பணிய மருதார் வனத்துப் பரமனையே. (13)

உப்பிட்ட கஞ்சிக் கிரந்துழன் றேபிற ருண்கலத்திற்
றப்பிட்ட வெச்சிலுங் கிட்டா தலைந்து தவிப்பர்கண்டாய்
ஒப்பிட்ட மேருத் தனத்தினள் பாகத் தொருவனிதி
யப்பிட்ட னெங்கண் மருதார் வனத்திறைக் கன்பிலரே. (14)

சங்கமும் பற்பமுந் தேனுவும் பொன்மலர்த் தாருவுநன்
மங்கல வாழ்வு மயிராணி போகமும் வானரசும்
இங்கித மாந்திரு மைந்தரும் வாய்த்த திருநிதியப்
புங்கவன் போற்று மருதூரன் பொற்பதப் பூசனையே. (15)

மித்துரு பாலன முந்திரு மாதொடு மேதினியாள்
ஒத்துற வாழ்வதுஞ் சத்ருசங் காரத் தொருதிகிரி
கைத்தல முற்றதுஞ் சித்தநின் ருட்கிரு கண்மலரை
வைத்துறு மன்பல வோமரு தூடு வளர்ந்தவனே. (16)

ஆலால முண்டு மழிவற்றுப் பேரழ கார்பெருமை
வாலாய மாகத் தெரிந்து கொலோவுனை மாயவனும்
மாலாகிப் பெண்ணுருக் கொண்டணைந் தானொரு மால்விடையாய்
மேல்ரச் சுமந்தனன் பெற்றன னனந்த வேலையையே. (17)

காமனைக் காய்ந்தழ காருருக் கொண்டுயர் காமுகனுத்
தாமனை தோறுந் திகம்பர னாகித் தொடர்தவத்தார்
காமினி மார்கல விக்கலைந் தாயென்ன காரணங்காண்
தாமத நின்னிட மோகமுற் றேனைத் தழுவுதற்கே. (18)

பெண்ணைப் புணர்ந்தும் விடையாய்ச் சுமந்தும் பிரிந்திருக்க
வொண்ணா துனைகத் தொருபாதி யாம்புரு டோத்தமனும்
மண்ணுழங் கீண்டவ ராகம தாயும் மலர்ப்பதத்தைக்
கண்ணாரக் கண்டில னென்னேநின் மாணுருக் காட்சியதே. (19)

மேருவைக் கோட்டியும் வேதனைக் கிள்ளியும் விண்மலர்ப்பொற்
றுருவை யோட்டியும் வெல்கையுங் கூற்றைத் தடுத்துதைத்த
சீருறு பாதமு மென்மனக் கோயிலிற் சேர்ந்திருக்க
நேருவெங் கோள்களுங் காயுங்கொ லோநல்ல நீர்மையவே. (20)

மாதிரை சூழ்புட விக்கட் சிதம்பர மாண்டலத்தின்
ஆதிரை நாணின தம்பலக் கூத்துகண் டார்க்கஞ்சியே
வேதியன் வீண்டலைக் கோடினன் காலன் விழியழிந்து
மேதிதி ருப்பினன் றென்கோடிக் கோடினன் மீண்டிலனே. (21)

திங்களும் பாந்தழும் பூண்சடை யான்மரு தீசனடிப்
பங்கச மீமனப் பங்கசஞ் சாத்தினர் பாரரசாய்த்
தங்குல மக்களும் பேரர்தம் பேரருந் தாமரைப்பூ
மங்கையும் வாணியு மாதருங் கூட மருவுவரே. (22)

செம்பொலற் றுணைய னம்பொன் மணாளன் செகம்புரக்கும்
டம்பமெ லாந்ததிப் பாற்கட லோடிக்கி டந்ததுவே
வெம்புலித் தோலினைத் தோலுரித் தானையை வேண்டியணிந்
தம்பன் றடக்கு மருதீச னால மருந்தினனே. (23)

வேதம் புரிந்துல கெல்லாமுண் டாக்கிய வேதியனவ்
வேதப் பொருடெரிந் தோதில னோடினன் விண்டலைக்கே
வேதனைக் குட்டிச் சிறையிலிட் டான்பு வியையவனிற்
காதியுண் டாக்கினன் நம்மரு தீசுரன் கான்முளையே. (24)

இகல்புரி வோரைச் செகுப்பதற் கேக ணிரண்டிடந்து
பகல்புரி யாழியைப் பெற்றன னற்கடற் பள்ளியினான்
நகல்புரிந் தன்னதை யுண்டிருந் தானவ னல்குநலார்
புகலெனக் கொண்டேகி னன்மரு தீசுரன் புத்திரனே. (25

வெண்ணாகம் போற்ற விரைந்ததன் கேதம் விலக்கியதும்
திண்ணாக மேந்தலு முப்புரங் காய்ந்த சிறுநகையும்
பெண்ணாக மேற்றலும் விண்ணாகம் பூண்ட பெருந்தகையு
மெண்ணாக வற்றோ மருதர் வனேச னிசைப்பெருக்கே. (26)

பஞ்சா னனப்பரி யாளய னாதி பரமருடற்
பஞ்சா சனத்துப் பரஞ்சோதி யாமனப் பட்சியுடன்

எஞ்சாத வின்ப மாயிரந் தோட்டல ரேறிநுக
ருஞ்சாதி யன்னமன் றேமரு தார்வனத் துற்றதுவே. (27)

மூலத் தடியி லுறங்கிய பாந்தளை மோதியனல்
காலத் திறக்குங் கவாடங்கண் மூன்றுங் கடந்துமதித்
தாலத் தமுதைப் பருகியென் றுமையொடு தாண்டவஞ்செய்
சீலத்தைக் கண்டு நிலைப்பதென் றேமரு தீச்சுரனே. (28)

மோகா னலமிசை காமமுங் கோபமு முச்சுடராய்த்
தேகாதி யந்தமும் பற்றுதந் தோவுறு தீவினையேன்
வேகா துனதருண் மேகமென் மீதறி வென்னுமழை
வாகா யிரங்கமுன் வாமரு தார்குரு வானவனே. (29)

அரனே சிவசங்க ராபசு நாதம தாரியுமா
வரனே சதாசிவ சாம்பந டேசசி வாவெனநாத்
திரனேறச் சாந்த மனதேற வானந்தச் சேவடியென்
சிரனேற நீவரு வாய்மரு தேறு சிகரமணியே. (30)

சிரத்தை யுடன்மணஞ் செய்வித்த னீதி சிறந்தமுத்தித்
தரத்தைய லைக்கொளக் காதல்கொண் டேற்குத் தரவருவாய்
பரத்தையின் பாலு நடந்தனை தூது பரமதயா
கரத்தைய னீயல வோமரு தார்வனக் காவலனே. (31)

முன்னாட் டவந்தர லோகின தாருண் மூன்னின்றதோ
பொன்னாளி னன்பெனும் புத்திரி வாய்த்தனள் புத்தியுற்றாள்
அன்னாளொ டின்ப நுகர்ந்தருள் வாய்மன மாமனையில்
என்னாஞ் மென்மரு கோனாக நீமரு தீச்சுரனே. (32)

மாலும் பிரமனும் வாசவ னாதிய வானவரும்
நாலுங் கயமுக னும்பரை யாதி நளினைகளும்
மேலும் பிறவுள யாவுநி னாருண் மேவறிவே
ஏலுங் கமழ்மது வார்பொழில் சூழ்மரு தீச்சுரனே. (33)

சூராதி யான கொடுந்தீயர் மாளச் சுரர்தமதூர்
நேராய்ப் புகுதர மாலயன் போற்ற நினைத்தனற்கண்
ஓரா றெனக்கொண் டனற்பொறி யாறி லொருகுழவிச்
சீரா யதுங்கர வேலாயு தம்மரு தீச்சுரனே. (34)

ஆராயி னம்மரு தீச னார்விளை யாடுமறை
பூராய மாயறிந் தாரெவர் மாலயன் புங்கவரு
மோரார் சதுமறை யுள்ளிருந் தானவை யுற்றுணரா
ஈராயி ரக்கனு நாவுமு ளானு மிசைத்திலனே. (35)

திருப்பாவை யுங்கலைப் பாவையுஞ் சேரத் திளைத்துமுத்தி
உருப்பாவை யன்புட னித்தியங் கூட வுவப்பர்கண்டாய்
கருப்பாவை யன்னைப் பொருப்பாள னீயுங் கனியமுதை
விருப்பாக வுண்மரு தான்றிரு நாமம் விளம்பினரே. (36)

மருப்பையில் கொங்கைகண் மாற்புயங் தாக்க மயன்மிகுத்துச்
செருப்பையில் காமக் கலவியின் போகந் திளைத்திடுவான்
விருப்பையின் றம்பைத் தனப்பொருப் போடொரு மேருவனை
தருப்பையில் பாணி மருதீசற் சேர்க்கச் சதானந்தமே. (37)

மய்யுண்ட வாட்கணி நெய்யுண்ட கூந்தலென் வான்வளரும்
மெய்யுண்ட வெம்முலைப் பூதர°மேந்தி விளங்கவல்குற்
பய்யுண்ட பாம்புட னிம்மோகப் பேயெனைப் பற்றலினின்
மெய்யுண்ட பூதி யருண்மரு தார்வன விஞ்சையனே. (38)

முலையே யருந்தி வளர்ந்தனை யாய்ந்திலை மோகமுற்றம்
முலையே யணைந்து மகிழ்நெஞ் சேயுன் முதுமையிலும்
முலையே நினைய வுதவுங்கொ லேமன் முனிவடக்கும்
முலையேய் முறுவல் பரஞ்சோதி பாகனை முன்னுவையே. (39)

மனையும் பொருளும் பெரிதென நாடி வருந்துநெஞ்சே
முனையுங் கதையுங் கயிறுங் கடாவு முடையநமன்
தனையும் விலக்கிச் சுகந்தரு மோநிலை தான்பெறுமோ
வினையுந் தொடரா மருதீசன் பாதம் விரும்புதியே. (40)

தினைப்பொழு தேனு மருதீச னார்பதஞ் சிந்திக்கிலை
நினைப்பளூ வாஞ்சகம் பற்பல வாமதி னின்றுழன்று
வினைப்படு வெந்துய ருற்றுழி யோர்ந்திலை வெய்யநெஞ்சே
தனைப்பிறர்க் காக்கிமண் டன்றலைக் கேயிடுந் தந்தியொத்தே. (41)

தண்ணந் திரைகளும் வெண்ணுரை யாதியுஞ் சாகரமாந்
தண்ணன்றி வேறுள தோசுக வாரி தனிற்சலிக்கும்

எண்ணங் களுக்கிடைத் தோன்றுசு பாவம தேயறிவாம்
வண்ணம் பெருக்கு மருதார் வனத்து மகாலிங்கமே. (42)

வானாதி யைந்துங் கலந்தரு வான மலரவனென்
போனாதி கிட பரியந்த மாயையிற் பொன்றுவநீ
தானாதி யந்தமில் லாதசம் பூர்ணச் சதானந்தமாம்
தேனாதி யென்மனப் பங்கயத் தேமரு தீச்சுரனே. (43)

நஞ்சும் மழுவெதனக் கொண்டருள் வானை நயந்துநிதம்
கொஞ்சுங் கிளிமொழிக் கயற்கணியே யுன் குழவியெனை
யஞ்சும் படிபிணி பற்றவி டேலனை யார்தகையே
உஞ்சும் படிக்கொரு சஞ்சீவி யாயுனை யுற்றனனே. (44)

புலியுங் கரடியு மேனமு மாளியும் போதகமும்
புலியும் பிறமிரு கங்களெ லாம்பதம் போற்றும்வரிப்
புலியும் பணியும் பணியுந டேசன் பொறியரவம்
புலியும் புரிசடை யான்மரு தீசனைப் போற்றிடினே. (45)

பொன்னையும் வேண்டிலன் பூவையும் வேண்டிலன் பூவரசு
தன்னையும் வேண்டிலன் தாரையும் வேண்டிலன் சாருமுத்த
மின்னையும்வேண்டிலன் விண்ணையும்வேண்டிலன் வேட்டலொன்றே
என்னையுஞ் சேவடிக் காட்கொள வேமரு தீச்சுரனே. (46)

மேருவுன் கையிற்பங் கேருகந் தாளில் விரைந்துதவுந்
தாருவுந் தேனுவு நின்றிருக் கோவிலிற் சர்வநிதி
சேருங் குபேரனு நிற்கரு காகச் சிறந்தடியேன்
நேரும் பொருணிற் கெனுமரு தீசநின் னேயமொன்றே. (47)

இசையே படித்திட மூவால் லேனிற் கினிமைதருந்
தசையே கொடுவந் தருத்திட வேடுவன் றனுமல்லேன்
வசையே யிலாத புலையன லேன்மற வாதிருக்கத்
திசையே யுடுத்த மருதீச நின்றிருச் சேருவனே. (48)

மோகாதி யாமலச் சாக்கடை நீரின் முழுகிநர
காகார மாத்துய ருற்றநெஞ் சேபுவிக் காவலனு
வாகாப் புரக்கு மருதீசர் பாத மலர்த்தடஞ்சேர்
சோகாதி யற்றுநல் வாசனை யோடு துலங்குவையே. (49)

கேதந் தருங்கொடுங் காலனுக் காகக் கிளர்ச்சியொடு
வாதம் புரிதரு நோய்களை நீக்கு மருந்தெனநால்
வேதம் புகழு மருந்தீசர் நாமம் விளம்பிமலர்ப்
பாதந் தனைவித நெஞ்சினிற் கூட்டிப் பருகுமினே. (50)

போதத் தருக்கணைச் சாய்த்திருண் மோகப் புனத்துமினு
ரேதத்தை யுண்ண முலைக்கிரி மீதுற் றெழுமதத்தாற்
சூதத்தி னல்குற் கிடங்கினில் வீழ்மனத் தும்பியுனைப்
போதத் தலைவன் மருதடிக் கேதளை பூட்டினனே. (51)

சிந்தித் தவர்க்கும் பிறமதங் கூடிய சிந்தனையா
னிந்தித் தவர்க்குந் திருவறி யாம னினைவுபல
மந்தித் தவர்க்கு முளத்திருந் தேயருள் வண்மையனுஞ்
சந்தித் தவர்க்கவ ராமரு தார்வனச் சங்கரனே. (52)

திருந்தே வரும்பணி யுந்தகை யாகித் திருமறையிற்
பொருந்தேவ ருண்டவ ரென்மனக் கோயிலிற் புக்கிருந்தான்
பெருந்தேவ ருந்தேடு தற்கரி தாகப் பிறப்பறுக்கு
மருந்தே வருந்தே னதுமரு தூடெழு மாலிங்கமே (53)

தாரம் பிறைக்குந் தருணம் பிறைக்குந் தளர்ந்துவிழிக்
தாரம் பிறைக்குஞ் சடையம் பிறைக்குச் சரணெனுகின்
தாரம் பிறைக்குறு வண்டினந் தேடுமென் றன்மகனின்
தாரம் பிறைக்கென லன்புகொண் டாள்மரு தாரரசே. (54)

சீறுங் கொலைப்புலி யும்விடப் பாம்புஞ் சிரிக்கவவை
கோறும் வணமனைத் துங்குறித் தாடிக் குதித்தனைநாள்
தோறுந் துதித்தென் குறைகளைக் கூறியுந் தோன்றிலையிற்
சேறும் புகழுக் கழகிது வோமரு தீச்சுரனே. (55)

வில்லா லடிக்க வப்பார்த் தனலேன் விரும்பியுனைச்
சல்லா லடிக்கக் கொடியன லேன்கழி கொண்டுவெய்ய
சொல்லா லடிக்க வதிகாரி யாகிலன் சூழ்ந்திசைகொள்
சொல்லா லெனக்குமுன் றோன்றுதி யோமரு தூரரசே. (56)

புரையே யிலாத புகழுடை யான்றனைப் பூரிதனென்
னுரையே மறைத்தொளி யுன்றனைக் கூறு முணர்வுடையாய்

துணையே யடைக்கலம் புக்கின னிற்கிது தோன்றிலையோ
விரையே யொழுகு மருதார் வனத்துறை விண்ணவனே. (57)

சோரமுங் கோரமும் பொய்யும் பொறாமையுஞ் சூழ்சினமுஞ்
சாரமு மற்றுள தீத்தொழில் யாவையுஞ் சார்ந்துணையுந்
தூரம தாக்சியு நெஞ்சின னாயினுஞ் சூழ்ந்துணையென்
னேரமும் போற்றின னீபொறுத் தாள்சிவ நித்தனனே. (58)

ஆயேன் றுதியமு தாரேனி னாடிக் கன்புமிலேன்
சீயேன் பிறந்தன னின்னையு மேநிந்தை செப்புகின்ற
தீயே னெனினுநிற் சேயனன் றோமனித் தேயருள்வாய்
வேயே பயின்றமுத் தேமரு தூருறை மேலவனே. (59)

எத்தனை துற்குண முற்றிருந் தாலுநீ யெண்ணிலவை
யத்தனை யும்வில கிப்பரி சுத்தம தாயிடுமே
மத்தனைத் தீச்சம ணத்தனை யேசிவ வாகப்பணு
வைத்தனைத் தேசிக னேமரு தூரில் வளந்தவனே. (60)

182095

ஆளா ளெனக்கொண் டடியருக் காக வருந்ததிநேர்
மாளாத கற்புடைத் தம்மனை யாரை வழங்கினர்நின்
தாளாண்மை பெற்றிலன் றாழாமை யுற்றனன் றுங்குவையோ
வாளா விருக்கினு தண்ணரு ளீயு மருதப்பனே. (61)

காணினுங் காணு திருக்கினு நின்னிரு கான்மலரைப்
பூணினும் பூணு திருக்கினுந் தண்ணருள் பூத்தருள்வாய்
எண்ணினு மெண்ணு திருக்கினு நீயெம் மிறைவனன்றோ
வீணினுங் காணி னிலவாடு மேமரு தீசுரனே. (62)

அருந்தியெப் பத்தியத் தும்பிணி தீர்விலை யார்மருந்தாற்
றிருந்திய பத்தியஞ் சிற்றள வேகெடின் றீங்கதுவே
இருந்திடத் தெண்ணினு மெப்பிணி யுந்தெறு மேபரியா
மருந்தினைக் கண்டவர்க் குண்டுகொ லோபவ மாநிலத்தே, (63)

முன்னிய வொண்ணு மருந்துபே ரின்பத் துணருருவாந்
தன்னிய லெங்கும் பரவிய தாலிதன் சாரமுண்டார்
முன்னியல் ரோமன் புசண்டனெண் கோண முனிவரரும்
மன்னிய நின்றார் பிரமாதி தேவர் மடிந்திடவே. (64)

அத்தியு நாகமு மெட்டடிப் பூச்சியு மாகிலனான்
நித்திய லிங்க வுருவாகி நிற்கவின் னீணிலத்தில்
சத்திய மானுரு பெற்றிருந் தானு நளினமல
ரத்தத் தணிவாய் மருதார் வனத்தரு ளாலயனே. (65)

நஞ்சுறை நாக மெனவுதித் தானு நயந்துகழற்
செஞ்சிலம் பாகிச் சிறந்திடு வேன்மதச் சேறுகமழ்
வெஞ்சின மால்களி றென்னவுற் றேனிலை மேலணியு
மஞ்சனப் போர்வைய தாவதற் கேமரு தாண்டவனே. (66)

யோகார் திகம்பர னாகினின் றுய்க்குடை யோனைகயுற்று
வாகாய்ப் புனைதர வரிப்புலி யாகி வழங்கிலனே
சோகா னலத்துடல் வேகாது னாருட் சோனைமழை
யாகாரத் தென்னையு மாட்கொள்வை யோகருணாகரனே. (67)

பூவார் தலங்களிற் பொன்னுல கேய்ப்பப் புனிதமிகும்
மாவார் மருத வனமருந் தாக வளர்சிவனே
பூணாய்க் கனியாய்ப் பொலியெரு தாயொரு புள்ளினமா
மாவாய்ப் பிறக்கினு நின்னொடென் னுளு மருவுவனே. (68)

முடியாத வானந்தத் தாண்டவப் பாத முளரிமனத்
தடியார்க ளென்றுங் குடியாக மேவுநி னாலயத்தின்
படியாக வன்றிப் பொடியாக வன்னவர் பாதமுறும்
படியாக வாழின் மருதீச வேறெது பாக்கியமே (69)

கல்லானை யைக்கரும் பூட்டியுங் கானகத் தானையுருக்
கல்லானை யாக்கியு மல்லானை யானைமெய் காய்ந்துமிசை
வல்லானை யோட்டியுஞ் செல்லானைக் காத்தும் வணங்கினர்பாற்
செல்லான வன்புரைக் கற்பால தோமரு தேசுரனே. (70)

வில்லானை யென்றும் விளியானைத் தீய வினைகளைய
வல்லானை நாக வளையானைக் கால வயத்தனைத்துன்
பில்லானைக் கொங்கைப் பிடியானை மேவும் பெருங்களிற்றை
மல்லானை நல்ல மருந்தானை யென்றும் வழுத்துமினே. (71)

அரியானை யாவு மறிந்தானை யந்தணர்க் காரறிவாய்ப்
பிரியானை மற்றுப்பிரிந்தானைப் மோலும் பெருந்தகையைப்

புரியானைத் தோலைப் புரிந்தானைப் போர்வை பொருவில் விடைப்
பரியானை யேற்றப் பரிந்தானை நாளும் பரசுமினே. (72)

செண்டாடு கொங்கைச் சிலையாரைக் கூடித் திளைத்துமது
வுண்டாடி னாலு முனமற வாதுன் னொளிர்முகமும்
வண்டாடு கூந்தலும் பாகமும் வேணி மதிநதியும்
எண்டோளுங் குஞ்சிதப் பாதமும் போற்றுந் தெரிசனமே. (73)

துஞ்சாம லன்ன மிரங்காம னிற்குஞ் சுதன்றனக்கும்
அஞ்சாக் ககன முகட்டோடு வேதனை யாண்டருள்வாய்
ஒஞ்சாம லுன்னிசை பாடிய நாவுட னுன்னிமகிழ்
நெஞ்சான தெற்களித் தான்மரு தூர்வன நித்தியனே. (74)

பெற்றா ருடன்பிறந் தார்மக்கண் மாதர் பெரும்புவியில்
உற்றா ரனந்தம் பவந்தோறு மாய்ந்தனர்க் கோரளவோ
துற்றாரு மற்றிடத் தோடுவ ரென்றுந் துலங்குநின்போல்
முற்றார்சொல் காக்க மருதார் வனாதிப வல்லவனே. (75)

நாடிக ளோய்ந்து கபமீறி வாயு நடைமுடுகக்
கூடிய கேளிர் அழுதுள்ள மாழ்கக் குறைபொழுதுன்
னாடிய பாத நினைவுறு மோநினை வற்றிடுமோ
நாடியின் றேதுதித் தேன்மருந் தேநின் னலம்பெறவே. (76)

இல்லாத தாயுள தாயுணர் வாகி யிதயமூளைக்
கொல்லாத தாயுளங் கண்டன யாவு மொழிகெனவோர்
சொல்லாத சொல்லுரைத் தென்னையுந் தன்னுட் டுலங்கவைத்த
வல்லாய் பரம மருந்துரு வான மகாலிங்கமே. (77)

மீதூறு வைத்தன மேயுல காக விளங்கிநொடிப்
போதூறு வெந்துய ராமாறு மாலிதைப் போற்றுவரோ
வாதூறு கூற்றை யுதைத்தானை யோங்கு மருதனைமான்
மாதூறு பாகனைப் போற்றினர்க் கேபர மானந்தமே. (78)

வானாடு போற்றிய வாசவ னாயினு மாமறையோன்
றானாயி னுந்திரு மாலாயி னுந்நிலை தான்பெறுமோ
பானாறு செந்தமிழ்ப் பாண்டிய னார்பரி யாமருந்தூர்
மீனாயி னுங்கலை மானாயி னுந்திரு மேவியதே. (79)

செங்கன காசலம் வெண்கன காசலத் தேறுதல்போற்
றங்கன காசலம் விண்சலர் தாங்கித் தரணிமிசைப்
பொங்கன மார்தரக் கற்பித்தல் போலும் புரிமுடிகொள்
புங்கவ நோயறுக் கும்மருந் தாகிப் புரப்பவனே. (80)

காரிரு ளாக விகாரமுஞ் சூலுங் கருங்கயிறும்
ஊரிய மூரிக் கடாவுங்கொண் டானை யுரனழிய
சேரிகல் பாதமு நீர்மதி வேணியு நீற்றழகும்
கூரிய சூலமும் மால்விடை யுநெஞ்சிற் குடிகொண்டதே. (81)

நாளுங் கரணமுந் திதிவார யோகமு நாமமுறுங்
கோளுங் கொடிய வினைகளு மேநற் குணந்தருமே
நாளும் படியி னினைந்திருந் தாற்கய னணயன்னி
யாளும் புறத்தனை மாமரு தார்வனத் தண்ணலையே. (82)

நெடுந்திரை யோடிக் கடந்துறத் தேடு நிதியமெலாம்
இடுந்தர மற்றுச் சுமந்தன ராயினு மேமமெவ்விதிர்ச்
சுடுந்துய ரத்தைத் தடுக்குங்கொ லன்றித் தொடருங்கொலோ
நடந்தரும் பாத மருந்தல வோசுக நல்குவதே. (83)

உள்ளங் கனிந்தெழுந் தோங்கன்பர் வாயி லுறும்புனலும்
விள்ளம் பரகதி யிற்சுசி யாவுண்டு மிஞ்சுபுலால்
தெள்ளமு தத்தையுந் தள்ளிநி யேற்குஞ் சிறப்புறுமேற்
கள்ளம் பிறவாந் திருமரு தார்வனக் காவலனே. (84)

மீதுறு மன்பரஃ தில்லாரென் றுயு விகற்பமதில்
லாதுறு நற்றுணை யாமருந் தேயெனை யாட்கொளுவாய்
பேதுறு பன்றிக் குருளைகள் பாலுணப் பெற்றதுவாய்
ஓதுறு மன்னவன் புத்திர னாகவு முற்றனையே. (85)

போராடு தீத்தொழி லாளரும் போற்றிப் புகச்சரணந்
தாராடு தும்பை யணிந்திருப் பார்கணின் றுணிவினைவார்
நேராடு மாற்றக் கனகாதி தீயரை நின்னினைவாற்
சீராடு பெற்றனன் சீதர னார்மரு தீச்சுரனே. (86)

அண்டங்கள் கோடி கருவுயிர்த் தாடுங் கலாபமயில்
கண்டங் ககமகிழ் கூர்தரக் கண்டங் கருத்தமுகில்

கொண்டங் கருணை மழைபொழிந் தென்மனக் கூடமமு
துண்டங்கி நீங்கி யினிதுற மாமரு தோங்கியதே. (87)

வாடா மருந்து மறைநாலுங் கூடி வழுத்தறியக்
கூடா மருந்து கடைநாளிற் றோன்றுங்க டெங்கனற்கும்
வீடா மருந்து வினைகளைத் தீர விலக்குநம
ஞடா மருந்து பரியா மருந்தினை நண்ணுதுமே. (88)

உண்ணு மருந்து சனகாதி யோகியர் உள்ளிருந்துங்
கண்ணு மருந்து கலிதீர யாருங் கனிந்துதொழுந்
தண்ணு மருந்து தடங்கட லூணனுந் தானறிந்து
பண்ணு மருந்து பரியா மருந்திதைப் பாடுதுமே. (89)

அரியா மருந்தய னுமருந் தாதி யகிலமுணர்
கரியா மருந்து கலவா மருந்து கருத்துளென்றும்
பிரியா மருந்து விசகா மருந்து பிணிவிலக்கும்
பரியா மருந்தென மாமரு தார்வனப் பாலுற்றதே. (90)

அசையா மருந்த தடிமுடி மூவருங் கண்டறிதற்
கிசையா மருந்தென கமிருந் தோங்கி யினிமையொடெண்
திசையார் மருந்து விருத்தரைப் பாலர் செயமருதின்
மிசையார் மருந்து பரியா மருந்தென மேவியதே. (91)

திருவா மருந்து திகழ்பச்சை பாதி செறிபவளத்
துருவா மருந்து திருநீற் றுருபத் தொடுபிணிகள்
மருவா மருந்து மலையா மருந்து வகுத்துரைக்கப்
பொருவா மருந்து பரியா மருந்தினைப் போற்றுதுமே. (92)

கண்ணுற் றிருவை யருந்தியுங் காதிற் கனிந்துனிசைப்
பண்ணு முதத்தைப் பருகியு ஞானப்பஞ் சாக்கரமாந்
திண்ணுங் கற்பமென் வாயாற் புசித்துநற் றேமணந்தும்
கண்ணு மருந்தா லயஞ்சூழ மாளெனக் காத்தருளே. (93)

முனமே புரிந்தநற் புண்ணிய மோவென்றன் முற்குலத்தோர்
தினமே புரிந்த தவப்பய னேகுணச் சீரியர்தம்
இனமே மறந்த சிறியேனை யாள விரங்கியநின்
தனமே யுரைக்க மருதார் வனுதிப சாத்தியமே. (94)

மோகப் பெருங்கடல் வெண்டிரை பூத்த மூளரியகத்
தேகப் பசும்பெடை சேர்மரு தாதிபச செவ்வனத்தின்
யோகத் துதித்த பிரபோத வாரிய மோகமதாய்ப்
பாகப் படாமற் சகமெங்கு மோடிப் படர்ந்ததுவே. (95)

தூலங் கடந்தரு லிங்கங் கடந்து தொடர்விச்சை
மூலங் கடந்தவை யாநெருப் பாற்றின் முழுக்கடித்த
சாலங் கடந்தறி வாமயிர்ப் பாலந் தனிலிவர்ந்து
காலங் கடந்திருப் பார்மரு தார்வனங் கண்டவரே. (96)

படியாளி பாற்பரி விற்றுமோர் வடிணன் பதிபுரந்தும்
பிடியா ளெனக்கூலி கொண்டுமண் டேக்கியும் பீதியுற்றுக்
கடியாழி யோட விறைகைச் சுமந்துநற் கானஞ்செய்தும்
அடியார்க் கடிமைத் தொழில்புரிந் தான்மரு தாண்டவனே (97)

அடியா மருங்குற் கவுரியும் வாணிபத் தோகையளும்
நடியாந் திருப்பூ வணத்தாளு நீசனு நான்மறைபின்
குடியான சுந்தர னுங்களிகூர்க் குதித்தெழுந்தான்
அடியார்க் கெளிதினிற் றோன்றுகிற் பான்மரு தாண்டவனே (98)

சிவசங் கரசிவ சங்கர மாதவ சேவிதசாம்
பவசங் கரச்க பாலக்ரு பாகர பாவனசேத்
துவசங் கரதிரி சூலக பால சுபாவசிவா
அவசங் கரமரு தீசநின் பாத மடைக்கலமே. (99)

நீராட லுண்ணலென் னைத்தொழில் கானடை நீண்டுறங்கல்
தாராரு கிற்கபி டேகனை வேத்தியம் சார்சபரி
பேராருங் கோயில் வலஞ்சூழல் வந்தனை பேசல்சபம்
நேராக வேற்றருள் வான்மரு தாடவி நித்தியனே. (100)

வாழி:

வாழிய வந்தண ராதிநன் மானிடர் மானிலமும்
வாழிய நெல்லை மருந்தூரு நித்திய மாமறைகள்
வாழிய நித்த மருந்தலங் கார வரச்சதகம்
வாழிய வோதினர்க் கிச்சையெ லாந்தரு மங்கலமே.

முற்றிற்று.

ஶ்ரீ ராமஜெயம்.

# சேவகமாலை.

## காப்பு.

### கட்டளைக்கலித்துறை.

தார்மங்கை வாழுமப் பங்கசம் போலுந் தடமருந்தூர்
சீர்மங்கை கேள்வன் வயிறளைந் தீன்றருள் சேவகற்கு
நேர்மங் கலத்தமிழ் மாலையென் னுவி னிகழ்த்தியநூல்
தேர்மங்கை புத்தியஞ் சித்திக் கணுளனைச் சேவிப்பனே.

## நூல்.

தாதாடு பூங்குழன் மின்கொடி வாழ்தருந் தண்ணகலப்
போதாடு வானமுகில் தந்தமுத் தேசிவ புத்திரனே
மூதாடு பூரணி புட்கலை நாளு மருவுபுயா
சீதாடு பூம்பொழின் மாமருந் தூர்வளர் சேவகனே. (1)

வானாடு பிள்ளை மதியாடு வேணி மவுலியும்வெண்
கோனாடு வாண்முக முங்கரு ணாகரங் கூர்விழியுங்
கானாடு பாணிப் புயாசலச் சீருங் கழன்மலரின்
தேனாடும் போற்றிசெய் தேன்மருந் தூர்வளர் சேவகனே. (2)

வாதாடு துஷ்டரை மாய்த்தவ ராவி மறலியுணக்
கோதாடு மாக்கையைப் பூதமும் பேயுங் குடித்துமகிழ்ந்
தோதாடு கூரத் திரிசூலந் தாங்கு துரையெமக்குத்
தீதாஉ னீக்கிய வாமருந் தூர்வளர் சேவகனே. (3)

மீத்தாவு மானை விளையாடத் தீயர் விளிந்தழியக்
கூத்தாடித் தேவரும் சித்தரு நாகர் குழுவுந்தொழக்
காத்தாளும் பேரருட் சாத்தா வெனுமறை கத்தவுயர்
தீர்த்தாவென் றீவினை தீர்மருந் தூர்வளர் சேவகனே. (4)

தருவும் புகழுந் தடக்கையுஞ் சீலத் தருமமுயர்
உருவும் கருங்கடல் வண்ணமும் வீர முயர்தவிசும்
மருவும பரமசின் முத்திரைப் பாணியும் வண்கருணைத்
திருவுந் தெரிதர வாமருந் தூர்வளர் சேவகனே. (5)

ஞானசம் பூரண புட்கல யோக நயந்துயர்ந்த
மோனச தானந்த முத்திய னேசிவ மூலிகைபால்

ஆனைக ரும்பசு மைக்கொழுந் தேயடி மைக்கருளுந்
தீனத யாகர னேமருந் தூர்வளர் சேவகனே. (6)

ஆலத்தை யாரமு தாக்கும ணாதி யருமருந்தின்
மூலத்தைக் காத்ததன் றென்பான் முளைத்தெழு மூலிகையே
காலத்தை வென்றன்பர் நோவனு காமற் களிக்கவரு
சீலத்தைப் போற்றிய வாமருந் தூர்வளர் சேவகனே. (7)

எளியார்க் கிடர்வினைக் கும்வலி யாரை யெறித்தகற்றற்
களியா ரரசென வோர்கணந் தாழ்த்தலு மாற்றகிலாய்
வளியார் நெருப்பென வெற்கிட ராயுறு வன்பகையைத்
தெளியா தடக்கிய வாமருந் தூர்வளர் சேவகனே. (8)

மாயாத வஞ்சகத் தீயரை நேய மறந்தவரை
ஈயாவு லோபரை யின்னல்செய் தாரை யிகழ்ந்தவரை
வாயாற் குருதியைக் கக்கிடச் சூலம் வழங்கிடுவாய்
சேயா யெனைப்புரந் தாண்மருந் தூர்வளர் சேவகனே. (9)

முற்றவத் தானுறு பொற்செருக் காலதி மோகமுற்றுப்
பெற்றவ ரேழையர் கற்றவ ரந்தணர் பெண்களென
வுற்றுணர் வின்றிச் சுயநல நாடி யொறுப்பவரைச்
செற்றறம் பேணிய வாமருந் தூர்வளர் சேவகனே. (10)

மருவாற் பெருகு மலர்மாலை யார வடமருவிப்
பொருவாப்பொலியும் பொருப்பிணைத்தோளுறு பொற்பவுன்றன்
தருவாற் புகழ்பெறுங் கைமலர் போற்றிச் சரண்மலரைத்
திருவாப் புனையமுன் வாமருந் தூர்வளர் சேவகனே. (11)

காதே யசைதரத் திக்கிரி யாடக் கனகமணிக்
காதே யசைதரத் திக்கச மோடக் கலங்கியெதிர்க்
காதே திசைமன ருஞ்சர ணாகக் கசமிவர்ந்து
தீதே யகலமுன் வாமருந் தூர்வளர் சேவகனே. (12)

பொல்லாத பேயசு ராதியர் மோகம் புரியிருளுஞ்
செல்லாகப் போதப் பெருஞ்சோதி தோன்றச் சிறகடித்தின்
கெல்லாரைக் கூவிடு கோழியுந் தோகை யெடுத்தருள்வாய்
செல்லா ரணிபொழில் மாமருந் தூர்வளர் சேவகனே. (13)

எந்தாயு மையனு மென்குரு மூர்த்தியு மென்குலத்து
வந்தாளு மீசனு நீயல வோவிந்த மாநிலத்திற்
சிந்தாகு லந்தவிர்த் தாளனின் பாரஞ் சிவசுதநின்
செந்தா ளடைக்கலம் வாமருந் தூர்வளர் சேவகனே. (14)

வென்றிகொள் வீரக் கழலொலி வானவர் வேந்தனைக்
குன்றினி லேறிக் கொடுந்தொழிற் றானவர் கூர்ப்பயமாத்
துன்றிய வெம்புலிக் கூட்டமு மாய்த்துத் துணிவுதரச்
சென்றருள் காவல னேமருந் தூர்வளர் சேவகனே. (15)

காரடங் கப்பறை வாச்சிய மோடடங் காதொலிப்பப்
பேரடங் காவிசை சின்னமும் பேசிடப் பெண்ணிருவர்
வாரடங் காமுலைப் பூரண கும்பம் வழங்கவுன்றன்
சீரடங் காதுரைக் கேமருந் தூர்வளர் சேவகனே. (16)

வாயசர வேத்தி வணங்கிய மாதவர் வானவரு
மோயார்க் கிதுதன தன்முடி வாசவன் மோலியிது
வீயான் மகுடம் விலகுமி னென்று விளித்தொதுக்கச்
சேயார் தவிசுறை வான்மருந் தூர்வளர் சேவகனே. (17)

பொற்குப்பை யேறி வடயேரு வாகப் பொலிதலெண
நெற்குப்பை யேற விளைதரு மாவள நீள்வயல்சூழ்
நெற்குப்பை மாநகர் காவல்கொண் டாளு நிருபநெஞ்சத்
திற்குப்ப லங்கொடுத் தாண்மருந் தூர்வளர் சேவகனே. (18)

ஏருண் டினிய விளைவுண்டு நேரி லெழில்பெருகுஞ்
சீருண் டபசிய லுண்டுசந் தானத் திருவுமுண்டு
தாருண்ட கொண்டனின் றளிணைக் கேமனத் தாரணிந்தாற்
சேருண் மகிழ்க்கள வோமருந் தூர்வளர் சேவகனே. (19)

ஆரா வமுதை யருளாரி யாதரு மாலயனே
காரரர் மணிவனக் கற்பக மேயெமைக் காத்தருளும்
வீரா விசய நறுமலர் மாலை விளங்குபுயா
சீரார் கழல்பணிந் தேன்மருந் தூர்வளர் சேவகனே, (20)

மாற்றார்க் கதலி வனங்கெடச் சாய்க்கு மதகரியே
போற்றா ருயிர்க்குலை வெம்புலி போலும் பொலிபெருதே
ஏற்றுநின் றூர்க்கொரு வானமு தாக யிரங்கிநிதந்
தேற்றுநின் றுய்வரு வாய்மருந் தூர்வளர் சேவகனே. (21)

வானே புரக்கு மயிராணி மோகம் வளரசுரர்
கோனே நெருங்காத காவல்கொண் டாள்பெருங் கோளரியே
வேனேர் தடங்க ணணங்கனை யார்மன மேவுமெழிற்
றேனே வருக திருமருந் தூர்வளர் சேவகனே. (22)

வெங்காரப் பூதர் கருப்பணர் காளியு மெண் புபுனை
புங்காள வைரவ ரெண்மரு மேவ லுகந்துசெய

மங்காத கீர்த்தியு நல்லறந் தானும் வளரமணிச்
சிங்கா தனத்திருப் பான்மருந் தூர்வளர் சேவகனே. (23)

நாவா ளிசைப்ப நளினிகள் சூழ நகமடந்தை
ஓவா துனதெழில் கண்டுகண் டோகை யுறவெனது
காவாத வாசையி னின்னரு ளோங்கக் கசிவாந்து
தேவா வருவாய் திருமருந் தூர்வளர் சேவகனே. (24)

கண்டாடு சொல்லியர் காதலி யாரிரு கட்டிணையாம்
வண்டாடு தார்ப்புய மால்வரை மீதெழு வான்மணியாக்
கொண்டாடு குண்டலத் தேசிலென் மோகக் குழாமழியச்
செண்டாயு தாவரு வாய்மருந் தூர்வளர் சேவகனே. (25)

செண்டாடு வார்முலைப் பூரணி புட்கலை தேங்குழலாக்
கொண்டாடு வண்டினங் கார்வண மேனியிற் கூடவுயர்
விண்டாடு திண்புயத் தாடகத் தாடை விலக்க வெழிற்
றெண்டா யுதத்தர சேமருந் தூர்வளர் சேவகனே. (26)

கரும்பா னுழவர் கரும்பகட் டேருழுங் காறெரித்து
திரும்பா னிலவு தருமுத்திற் பூத்திடு செங்குமுதச்
சுரும்பாய் கடைசியா வாய்புக வோச்சுந் தொனிகடலெ
திரும்பான னெல்லையைச் சேர்மருந் தூர்வளர் சேவகனே. (27)

நீயே துணையென நின்பதம் போற்றின னீணிலத்திற்
றூயே யெனநித மென்றெனைக் காக்குந் தரமுனக்கே
தீயே னெனினுநீ காயே லுனைத்தினஞ் சிந்தைசெயுஞ்
சேயே னடியேன்முன் வாமருந் தூர்வளர் சேவகனே. (28)

ஐயா வருக வருளால யாமல ரம்புசக்கண்
துய்யா வருகநற் சூத்திர தாரணச் சுந்தரசாத்
தையா வருக சரணநிற் சேவடி தாமரைப்பூஞ்
செய்யா ளுறையு மணமருந் தூர்வளர் சேவகனே. (29)

சிங்கார மான மயின்மீதி லேறிய சேவகனார்
அங்காதற் சோதர னேசுப காரணச் சதானந்தனே
மங்காத கீர்த்தியின் மால்வரை தோன்று மதியனையாய்
சிங்காத செல்வ நிறைமருந் தூர்வளர் சேவகனே. (30)

நூற்பலன்.

சிலம்பெடுத் தாடிரு மால்வீர காங்கயன் சேவைசெயுந்
தலம்புகழ் சாத்தயன் சேவக ராயன் சரணமலர்
நலம்புனை யன்பிற் கவிமாலை முப்பது நவின்றுநிதம்
வ[illegible]ச்சையெ லாம்பெற வல்லவரே. (31)

முற்றிற்று.

9A
10-49